**10.10.2023**

**MC.1/2022**

**PW-1, திருவளர்செல்வி**

**எதிரி தரப்பில் கு.வி,**

இந்த மனு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் பேரனுக்கு ஜீவனாசம் வேண்டி தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரர் என் உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். என்னுடைய பேரன் 9 ம் வகுப்பு படித்துக் கொண்டுள்ளார். வயது 14 ஆகும். நான் என்னுடைய பேரனை நீதிமன்றத்திற்கு இரண்டு முறை அழைத்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய பேரன் அவருடைய அப்பாகிட்ட போவதற்கு முழு சம்மதத்துடன் தான் செல்வதற்கு தயாராக உள்ளார் என்றால் சரியல்ல. ரெங்கராஜ் தற்போது அவரது மகனை கூட்டிச் சென்று வளர்ப்பதற்கு தயாராக உள்ளார் என்றும் அனுப்ப நான் தயாரா என்றால் அவர் ராணுவத்தில் பணியாற்றுவதால் இங்கேயே இல்லை. அவருக்கு 2 வது திருமணம் முடிந்து அதன் மூலம் பிள்ளைகள் உள்ளது. குறுக்கு விசாரணை தொடர்ச்சி